# கோபுரம்


இந்து சமய, கலாசார அலுவல்கள்
திணைக்கள வெளியீடு



பண்டாரவளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய கோபுரம்

எண்ணமெல்லாம் வையகத்தில் கோபுரமாய் எழுந்திடுக

# சத்குரு ஸ்ரீ தியாகராஜ ஆராதனை



ஜனவரி 5ம் திகதி ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் நடைபெற்ற ஸ்ரீ தியாகராஜ ஆராதனையின் போது தியாகராஜ சுவாமிகளின் திருவுருவத்திற்கு பூஜைகள் நடைபெறுவதையும், இசைக் கலைஞர்கள் ஒன்றுகூடி பஞ்சரத்தின கீர்த்தனைகளை இசைப்பதையும் இப் படங்களிற் காணலாம்;



# கோபுரம்

இந்து சமய, கலாசார திணைக்கள வெளியீடு

மலர்: 2 ★ பிரமோதூத வருடம் தை மாதம் 1991 ★ இதழ்: 1

## எ ண் ண ம்

எமது கோபுரம் கடந்த ஆண்டு கார்த்திகை இதழாக நீண்ட காலத்தின் பின் வெளி வந்தமையைத் தொடர்ந்து வாழ்த்துக்களும் உற்சாகமூட்டற் செய்திகளும் வந்து குவிந்தன. அளவில் மெலிந்துவிட்டது என்று அங்கலாய்த்துக்கொண்டோரும் உண்டு. அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

புதிய ஆண்டில் பொங்கல் பொங்கிய மகிழ்வுடன் பல பண்டிகைகளையும், விழாக்களையும் எதிர்கொள்கின்றோம். அவை பற்றிய செய்திகள் அவ்வப்போது கோபுரத்தில் வெளிவரும்.

எமது அமைச்சின் பெரு முயற்சியாக எழுகின்ற தமிழ் சாகித்திய விழா எதிர்வரும் மார்ச் மாத இறுதியில், கண்டிமாநகரில் நடைபெறுவதற்கான ஒழுங்குகளை திணைக்களம் முனைப்புடன் மேற்கொள்கின்றது. இலக்கியப் பெருவிழாவாக இது அமையுமென்பது தமிழ் உள்ளங்களுக்கு மகிழ்வு தரும் செய்தி.

கோபுரம் பொலிவுடனும், தெளிவுடனும் திகழ்வதற்கு உங்கள் பங்களிப்பு மகத்தானது. எனவே உங்கள் பகுதி ஆலயங்கள் பற்றிய வரலாற்றுக் கண்ணோட்டக் கட்டுரைகள், தெளிவாக எழுதி அனுப்பிவைக்கப்படுமாயின் அவற்றை நாம் பிரசுரித்துதவுவோம். மேலும் சமய, இலக்கிய விழாக்கள் தொடர்பான உங்கள் பிரதேசச் செய்திகளையும் சுருக்கமாக எழுதி அனுப்பிவையுங்கள். கோபுரம் பற்றிய உங்கள் மேலான கருத்துக்களையும் நாம் வரவேற்கின்றோம். உங்கள் கருத்துக்களை பின்வரும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

பணிப்பாளர்,<br>
கோபுரம்,<br>
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்;<br>
9ஆவது மாடி,<br>
றக்ஷண மந்திரய,<br>
21, வொக்ஷோல் வீதி,<br>
கொழும்பு-02.

# இந்து

ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தாஜி மஹராஜ்



அண்மையில் மகாசமாதியடைந்த திருகோணமலை சிவயோக சமாஜ ஸ்தாபகரான குருமணி ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தஜி அவர்களின் மறைவினையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

பழமையிலும் புதுமையிலும் புகழ் பூத்து நிற்கும் இந்து என்ற நிறை வசனம் பூர்வீக காலத்திலிருந்தே உலகப் பேரறிஞர்களை வெகுவாகக் கவர்ந்து வந்திருக்கின்றது. அறிவு மண்டலத்தில் பலவாறான விமர்சனங்களுக்கும் கேந்திர பிந்துவாயிருக்கின்ற இச்சொல் அனேக கால கட்டங்களில் பல வர்க்கங்கள் மதங்கள் நாஸ்திசம் போன்றவைகளின் கடும் தாக்கங்களை ஏற்க வேண்டியிருந்தது. அத்தகைய தாக்கங்களுக்கிடையிலும் சமுத்திர அலைகள் மத்தியில் அசைவற்று நிற்கும் கருங்கல் பாறை போன்று இன்றும் உலக வியாபக ரீதியில் அது தலைநிமிர்ந்து நிற்கின்றது. தோன்றியும் தோன்றாமலுமிருக்கின்ற சகல தர்மங்களையும் சகல சாத்திரங்களையும் உள்ளடக்கி நிற்கும் இந்து என்ற பதத்திற்குச் சரியான அர்த்தமென்ன? அது யாரை அல்லது எதைக் குறிக்கின்றது?

''ஹீனம் தூ-ஷய நீதி ஹிந்து'' அதர்மங்களை ஒழிக்கின்றவன் இந்து. ''ஹிம் ஸாம்தமய நீதி ஹிந்து'' ஹிம் சாபரமாய சகல கருமங்களையும் நீக்கி ஜீவிகளை ஏகாத்ம பாவனையுடன் பார்க்கின்றவன் ஹிந்து. ''ஹிம் ஸந்தி தர்மோ நிதி ஹிம்-ஸா'' சனாதன தர்மங்களுக்குக் கேடு விளைவிப்பவரை ஒடுக்கி விடுகின்றவன் ஹிந்து. இந்து என்ற சொல்லுக்கு இந்துமத சாஸ்திரங்களில் இப்படிப்பட்ட அர்த்தங்களைக் காணக்கூடியதாயிருந்தாலும் அவையொன்றும் அதன் பொருளைச் சம்பூரணப்படுத்துவதாயில்லை. காரணம் அதன் உட்பொருள் வசனாதீதமானது. ஆத்மானுபூதியால் மாத்திரம் உணரக்கூடியது. அது மட்டுமல்ல இந்து என்ற பதப் பிரயோகத்தின் ஆரம்ப காலம் இதுவரையில் அனுமான நிர்ணயமாயிருப்பதைத் தவிர சரியான கால நிர்ணயம் நிச்சயிக்கப்படவில்லை. நீண்ட காலமாகப் பௌதிக ஆத்மீக அனுபவங்களிற் கூடி வளர்ந்து வந்த இந்து மதம் அகண்ட பிரபஞ்ச சாராம்சங்களைத் தன்னகத்து அனுபூதி மயமாக்கிய ஒரு சர்வஞான கலசம். இதுவரை காலமும் தோன்றியிருக்கின்ற சகல ஆத்மீக பௌதிக ஒளிகளும், சகல மதங்களுடைய அடிப்படைச் சித்தாந்தங்களும் இந்துக்களுடைய வேதாந்த தரிசன சாஸ்திரம் என்ற மணி விளக்கிலிருந்து கொளுத்தியெடுத்த சுடர்களென்பது வெளிப்படையான ஒரு சத்தியமாகும். வேதாந்த தரிசனங்களிற் பரவலாகக் காணும் பொருளாதார சமத்துவ சித்தாந்தங்களுடைய ஒரு பிராகிருதபாவம் மாத்திரந்தான் மாக்ஸிச தத்துவமென்பதைக் கூட நீங்கள் அறியும் பொழுது வியக்கக்கூடும். வேதாந்த தரிசன சாஸ்திரங்களைத் தவிர மற்றொரு சாஸ்திரங்களும் சம்பூரணமானவையல்ல. வேதாந்த தரிசனங்களில் காணும் அந்தர்முக சத்தியங்களை ஏற்காத நவீன சாஸ்திரங்களும் பூரணப்படுவதில்லை.

சனாதன தர்மத்தை அனுசரித்து வாழ்கின்றவர்களெல்லாம் இந்துக்கள் என்ற நம்பிக்கை இந்துக்களிடம் பரம்பரை பரம்பரையாகவே இருந்து வருகின்றது. முற்றிலும் யதார்த்தமாயிருக்கின்ற இக் கருத்தில் ஹிந்துக்கள் முழுத் திருப்தியுடையவர்களாயிருக்கின்றனர். ஆகையால் சனாதன தர்மந்தான் இந்து அல்லது இந்து மதம். சனாதனம் அல்லது என்றும் இருக்கின்ற

தர்மம் என்பது இந்து சமுதாயத்தின் ஜீவித நிஷ்டையாயிருக்கின்ற படியால்தான் இன்றுவரை யாதொரு உந்துதலும் இல்லாமல் இந்து கால வெள்ளத்தில் ஒழுகிப் போகாமல் இன்றும் மிதந்து நிற்கின்றது. சனாதன தர்மத்தின் மூல சக்திகள் உயிரினங்களுடைய நிலை பேற்றிற்கும், மானவ சமுதாயத்தினுடைய சேமநலத்திற்கும் அவ்வப்போது விலை மதிக்க முடியாத பலவற்றையும் ஈன்று கொடுத்திருக்கின்றது. இவைகள் உலக அரங்கில் இந்துக்களுக்கு நிலையானதொரு அந்தஸ்தை வழங்கியிருக்கின்றன. நாம் நம்முடைய தர்மத்தைப் பற்றியும் கலை கலாசாரங்களைப் பற்றியும் பெருமையடைகின்றோம். எனினும் கண்மூடித்தனமாகப் பழையதெல்லாம் நல்லவையென்றும், புதியவையெல்லாம் தீயவையென்றும் கருதுவது சரியில்லை. இந்த இரண்டு வழிகளிலிருந்தும் விலகி மூன்றாவதொரு வழியிற் சிந்தனையைச் செலுத்த வேண்டும். பழையதிலும் புதியதிலும் நல்லவற்றை மாத்திரம் தேர்ந்தெடுத்து இரண்டும் கலந்ததொரு புதிய வெளிச்சத்தில் நடந்து செல்ல வேண்டும்.

மாற்றமும் வளர்ச்சியும் இயற்கை நியதிகளென்பதை அறிந்து செயலாற்றா விட்டால் கால சக்கரம் நம்மை ஒரு மூலையில் உருட்டிவிடும். இந்து மதத்தின் சகல துறைகளும் காலா காலத்தில் படிப்படியாக மாற்றியமைக்கப்பட்டு வந்ததுதான் இன்று காணும் உயர் நிலை. ஆகையால் அடிப்படையில் மாற்றமில்லாமல் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கு தயங்கக் கூடாது. இதற்கேற்ற விசால மனதையும் அறிவையும் ஆற்றலையும் இந்துக்கள் பெற்றெடுக்க வேண்டும்.

சரித்திர காலந் தொடக்கம் விதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் இந்துக்கள் பல கோணத்திலிருந்து தாக்கப்பட்டு வந்திருக்கின்றனர். எனினும் இந்துக்களுடைய தாராள மனமும் பொறுமையும், விரோதிகளிடத்தில் இணங்கிவாழும் ஒருமைப்பாட்டுணர்வும், அவர்களை மென்மேலும் மேன்மைப்படுத்தியிருக்கின்றது. நமது சனாதன தர்மத்தின் அத்திவாரம் மிகஆழத்தில் பதிக்கப்பட்டிருப்பதால் இதுவரை ஏதொரு சக்திக்கும் அதைச் சிதைக்கவோ, நொருக்கவோ முடியவில்லை. எனினும் இடைக் காலத்தில் எமக்கிடையே வளர்ந்து வந்த சில பலவீனங்கள் சமுதாய ஐக்கியத்தில் ஆழமான சில பிளவுகளை ஏற்படுத்திவிட்டிருக்கின்றன. பிரபஞ்சத்தில் பரஸ்பர விரோதங்கள் என்று தோன்றக்கூடிய பலவற்றையும் இணைத்து வாழத் தகைமையுடைய இந்துக்கள் தங்களுடைய சமுதாய முரண்பாடுகளைச் சமப்படுத்துவதில் தோல்வி கண்டிருக்கின்றனர்.

வேற்றுமையிலும் ஒற்றுமையைக் காணும் ஆத்மீக ரகசியங்களை உலகத்திற்கெடுத்தோதிய இந்துக்கள் இதில் தோல்வி கண்டிருப்பதன் காரணம் என்ன? இந்தத் தோல்வியின் யதார்த்த ரூபத்தை ஒரு ஆத்ம பரிசோதனை மூலம் கண்டறிவதால் மாத்திரந்தான் இந்தப் பிரச்சனையிலிருந்து விமோசனமடையலாம். இந்து சமாஜத்தில் இன்று காணும் சீர்கேடுகளுக்கு அன்னியரை குற்றஞ் சாட்டுவது நமது சுபாவமாய் இருந்து வருகின்றது. இதில் சில உண்மைகளிருந்த போதிலும் தம்மிடமிருக்கின்ற ஏதோ பலவீனந்தான் அவர்களுக்கு அத்தகையதொரு சந்தர்ப்பமளித்திருக்கின்றதென்பதை அவதானமாகச் சிந்தித்தறிய வேண்டியதாயிருக்கின்றது.

குலம், கோத்திரம், ஜாதி, தீண்டாமை, மத தத்துவக் கொள்கைகள், குரு பாரம்பரிய பேதங்கள், வழிபாட்டு முறைகள் போன்றவைகளிலிருந்தெழுந்த பிணக்கும் போராட்டமுந்தான் இந்துக்களுடைய ஐக்கியத்தைச் சீர்குலைத்து வந்திருக்கின்றது. இந்தப் பலவீனங்களை அன்னியர் தங்கள் சுயநலத்திற்குச் சாதகமாகப் பயன்படுத்தினார்களென்பதுதான் உண்மை. நமது ஐக்கிய சக்தியைப் பிளவுபடுத்திக்கொண்டிருக்கும் உயர்வு தாழ்வுகளையும் முரண்பாடுகளையும் அறவே ஒழிக்கவேண்டும். இந்து ஆலயங்கள் இந்து சமுதாயத்தில் நடுநாடியாகவே இருந்து வந்திருக்கின்றன. இதன் கர்ப்பக் கிரகத்திலிருந்து ஒழுகிவரும் பிராணசக்தி சமுதாயத்தின் நாடித் துடிப்

பைச் சீராக்குகிறது. சேத்திரச் சைதன்னியம் இருந்திருக்காவிட்டால் இந்துமதம் வரண்ட பாலைவனம் போன்று சூனிய நிலையை அடைந்திருக்கும்.

வர்ண பேதங்களும், முரண்பாடுகளும் சம்பிரதாய பேதங்களுமுடைய இந்துக்களெல்லாம் ஆலயத்தின் ஏக சைதன்ய சக்தியில் ஐக்கியப்படுகின்றனர். வெவ்வேறு திசையில் இயங்கிக்கொண்டிருக்கும் இந்துக்களுடைய நாடி நரம்புகளை ஒன்றிணைத்துச் சமுதாயத்தின் இரத்தாசயங்களை ஆலயங்கள் சுத்திகரித்துக் கொண்டிருக்கின்றன. இத்தகைய மகாமகிமை பொருந்திய ஆலய கர்மங்களும், நிர்வாக முறைகளும் எவ்வளவு தூரம் இலட்சிய சுத்தியோடும், ஆத்மார்த்தத்தோடும் நடைபெறுகிறதென்பது இன்று ஒரு விமரிசன விஷயமாயிருக்கின்றது. ஆலயங்களில் பிராண நாடியைப் பாதிக்கக்கூடிய இவ் விஷயத்தில் கண்மூடி மௌனிகளாயிருப்பதும், அல்லது தெளிவும் சக்தியுமில்லாத அபிப்பிராயங்களை வைத்துக்கொண்டிருப்பதும் எதிர்காலத் தலைமுறைகள் அவிசுவாசிகளாக மாறுவதற்குக் காரணமாயிருக்கின்றது. ஆலயமென்ற நடுநாடியின் இருமருங்கிலும் இயங்கிக்கொண்டிருக்கும் இடகலை பிங்கலை போன்ற பெரும் சுவாசக் கலைகளாகிய ஆலய குருமார்களும் தர்மகர்த்தாக்களும் தான் ஆலயச் சுடரொளியைத் தூண்டிவிடும் தூண்டுகோல்கள்.

இவர்கள் போதிய இலட்சிய சுத்தியோடும் ஆத்மார்த்தத்தோடும் ஈஸ்வரார்ப்பண புத்தியோடும் ஆலய கைங்கரியங்களை நிர்வகிக்கத் தவறும் பட்சத்தில் சேத்திரங்கள் விரைவில் இரவுச் சந்தைகளாக மாறிவிடும். இதில் பரவலாகக் காணப்படும் சீர்கேடுகளைத் தகுந்தமுறையில் திருத்தியமைப்பதற்கு ஆலய பக்தர்கள் சிரத்தையெடுக்கவேண்டும். தவறினால் வளர்ந்து வரும் நமது பசுமை நிறைந்த இளம் உள்ளங்களில் மதத்தைப் பற்றிய தப்பபிப்பிராயங்கள் ஏற்பட்டு சூனியவாதிகளாக மாறிவிடுவர். பக்தர்களுடைய பக்தி விசுவாசங்களைத் தவறான வழியில் சுரண்டியெடுத்து ஆலயங்களை வளர்க்கப் பார்ப்பது ஆலயங்களுக்கும் மதத்துக்கும் பெருங் களங்கத்தை ஏற்படுத்துவதாயிருக்கும். இந்து மதத்தை எதிர்நோக்கியிருக்கும் இன்னொரு அபாயமும் இருக்கின்றது.

பெரும்பாலான இந்துக்கள் கிராமப்புறங்களில்தான் வாழ்கின்றனர். அவர்கள் அஞ்ஞானத்தாலும் வறுமையாலும் மத ரீதியான ஐக்கியத்தையிழந்து கூறு கூறாகப் பிரிந்து கொண்டிருக்கின்றனர். உதிர்ந்து விழும் இத் துண்டுகளைக் கொத்தித் தின்னக் கூடிய கழுகுகள் ஏற்கனவே ஆங்காங்கு கூடுகட்டி வாழ்ந்து வருவதையும் அறிந்திருக்கவேண்டும். நகர மத்தியில் வசதியான நாற்காலிகளில் மாத்திரம் உட்கார்ந்துகொண்டிருக்கும் நமது மத தத்துவ சம்ஹிதைகளும், புகழ் பெற்ற மத இயக்கங்களும் ஆதரவற்று ஒளியிழந்துவரும் கிராம இந்துக்கள் மத்தியில் ஒரு கை விளக்கையாவது கொளுத்தி வைக்க முயற்சி செய்தால் இருளடைந்த அவர்களுடைய வாழ்விலும் ஒரு விடிவெள்ளி உதிக்கலாமல்லவா? தனி நபர்களை மாத்திரம் மோட்சத்திற்கனுப்பி வைக்க முயற்சிக்கின்றவர்கள் சமுதாய மோட்சத்திலும் ஒரு சிறு கண்பார்வை செலுத்தினால் சமுதாயம் மோட்சத்துக்கு அருகதையுடையதாய்த் திரும். சுதந்திரத்திற்குப் பின்னர் இந்துக்களுடைய எண்ணிக்கை கணிசமான அளவுக்குக் குறைந்திருக்கின்றதென்பது ஆழமாகச் சிந்திக்கவேண்டிய விஷயம். பல தலைமுறைகளாய் எங்களை நோக்கி ஒழுகி வந்த விதேசச் சிந்தனைகளும் பழக்க வழக்கங்களும் இந்துக்களுடைய பாரம்பரியச் சிறப்புகளைச் சாரமாய்ப் பாதித்திருக்கின்றன. இன்னும் நாம் அதே ஒழுங்கில்தான் ஒழுகிக்கொண்டிருக்கிறோம். இந்த அடிமைத்துவ நிலை எங்களுடைய சுயஅறிவிலும் சிந்தனையிலும் முரண்பாடுகளையும் மயக்கத்தையும் உண்டாக்கியிருக்கின்றதுமல்லாமல் சுதந்திரமாகிய மூலவேரையும் அறுத்துவிட்டிருக்கின்றது. இனியாவது சொந்தக் கால்களில் நிற்பதற்கும், சுயமாகச் சிந்திப்பதற்கும், செயலாற்றுவதற்கும் முயற்சிக்கவேண்டும். இந்து என்று சொல்வதற்கு

வெட்கப்படும் . சில பகுத்தறிவாளர்கள் காலம் மாறுவதை அறிவதில்லை. இந்துக்களுடையதாயிருக்கின்ற எதனையும் நிந்தனைக் கண்கொண்டு பார்க்கின்ற இந்த நவீன பகுத்தறிவாளர்கள் விஞ்ஞான மண்டலத்தில் நிமிஷம் தோறும் மாறிக்கொண்டிருக்கும் மாற்றங்களை அறியத் தவறிவிடுகின்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஏட்டுப் பிரதிகளாயிருக்கின்ற இவர்கள் இருபதாம் நூற்றாண்டில் நவீன விஞ்ஞான கூடங்களில் இந்துமத வேதாந்த தரிசனங்களைச் சாஸ்திர ரீதியாக நிரூபித்து வருகின்றனர் என்பதை அறியவேண்டும். இங்ஙனம் நவீன விஞ்ஞான சித்தாந்தங்கள் வேதாந்த தரிசனங்களை நோக்கிப் பருணமித்து வருகின்ற இவ்வேளையில் விஞ்ஞான அறிவில் அரிச்சுவடிப் பாடத்திலிருக்கின்ற நம்மவர்களில் பலர் மத யதார்த்தங்களில் கண்மூடிகளாயிருப்பது முழு முட்டாள்தனமாகும்.

மத ஞானமில்லாத பௌதிக சாஸ்திரமும், பௌதிக சாஸ்திரமில்லாத மத ஞானமும் மனித சமுதாயத்தின் சரியான வளர்ச்சிக்கு உதவுவதாயிருப்பதில்லை. ஆகையால் எதிர்கால உலகம் ஞான விஞ்ஞான யோகத்திலிருந்து உடலெடுத்த பழமையும் புதுமையுங் கலந்த ஒரு நவீன உலகமாயிருக்கும். இதன் அறிகுறியாக சுபீட்சம் நிறைந்த மேல் நாடுகளிலிருந்து தங்களுடைய கலை, கலாசாரங்களைப் புறக்கணித்து இந்து ஆத்மீகக் குருமார்களை நாடி வந்து குவியும் மேல்நாட்டு இளைஞர்களைப் பார்த்தால் இதன் தாற்பரியங்களை நீங்கள் ஊகித்தறியலாம். வளர்ந்து வரும் இளம் வயதினர்கள் தங்களுடைய ஜீவித மூலகங்களை நோக்கி இறங்கிச் செல்வதற்கு இவ்வளவும் போதுமானது.

இனி எங்களுடைய வேதாந்த தரிசனங்களின் சாரம் என்ன? பரமாத்மா என்பது ஏகமான, நிலையான ஒரு சத்திய வஸ்து. அது சர்வ சராசரங்களினுடைய இருதய குகையில் இருக்கின்றது. உள்ளேயிருப்பது போல் வெளியிலும் இருக்கின்றது; அது சலிக்கின்றது. சலனமில்லாமலுமிருக்கின்றது. எக்காரணங் கொண்டும் பிளவுபடாத ஏக சக்தி எனினும் புலன்களுடைய பௌதிகானுபவங்களில் அது பலவாறாகத் தோற்றப்படுகின்றது. இதுதான் பிரபஞ்சத்தின் தோற்றம், நிலைபேறு, ஒடுக்கம் இவைகளுக்கு மூலகாரணமாயிருக்கின்ற பரமாத்மா. இவ்வாறு பலவாறாகத் தோற்றப்படுகின்ற துவைத பாவம், ருசிக்கும் சமியாப்பாட்டுக்கும் தக்கபடி படிப்படியாக வளர்ந்து அத்வைதம் என்ற ஏகாத்ம வாதத்தில் முடிகின்றது: இதுதான் வேதாந்த தரிசனம் தரும் ஏகாத்மவாத சித்தாந்தம். இது முழு மனிதவர்க்கத்தை மாத்திரமல்ல, சகல ஜீவராசிகளையும் ஒரு குடும்பமாகவே இணைத்து வாழவைப்பதற்குரிய அற்புத ஆற்றலுடையது. அமங்கலகரமானதொரு மூகூர்த்தத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் இவ்வுலகத்தைப் பாதுகாப்பதற்குரிய சக்தி, இந்த ஏகாத்மவாத சித்தாந்தத்தைத் தவிர வேறெதற்கும் இருப்பதாகத்தெரியவில்லை. இந்த இலட்சியத்தின் கீழ் ஆத்மீகத் தலைவர்களும் மதாசாரியர்களும், மதஸ்தாபனங்களுமெல்லாம் ஒன்றுதிரண்டு செயலாற்றவேண்டும்.

இது விஷயத்தில் ஜனங்களை ஒன்றுதிரட்டி அறிவுடையவர்களாக்கித் தீர்க்கும் பொழுது சமுதாயத்தில் உடைந்திருக்கும் பிணைப்புக்களெல்லாம் இணைந்து சரியாகிவிடும். இந்து சமுதாயம் ஒருமுகப்பட்ட பெரும் சக்தியாகவே வடிவெடுக்கும். பிராமணர்களுக்கு இருக்கவேண்டிய பிரம்ம சிந்தனையும், சத்திரியர்களுக்கிருக்கவேண்டிய வீரமும், வணிகர்களுக்கிருக்க வேண்டிய வர்த்தக விவசாயத் திறமையும் சூத்திரர்களுக்கிருக்கவேண்டிய தொண்டாற்றும் விசால மனமும் எவரொருவரிடத்தில் இருக்கின்றதோ அவர்தான் உத்தமமான இந்து.

சுருங்கக் கூறின் இந்து மதத்தின் பல துறைகளிலும் நிலவிவருகின்ற பாகுபாடுகளும், ஆலய கைங்கரியங்களிலும் நிர்வாகத் துறைகளிலும் வளர்ந்துவருகின்ற சீர்

கேடுகளும், கிராமிய இந்துக்களுடைய பரிதாபகரமான நிலையும், மத அறிவின்மையால் இளம் வயதினர்களுக்கிடையில் தோன்றிக்கொண்டிருக்கும் தப்பபிப்பிராயங்களும் சம்பூரணமடையாத விஞ்ஞான அறிவால் வரும் சூனிய வாதம் போன்றவைக்கு முடிவு காணும் வண்ணம் சக்திவாய்ந்த ஒரு மார்க்கத்தைக் கண்டறியவேண்டியிருக்கின்றது. இதுதான் இன்றைய அவசரமான தேவையும் நோக்கமும். இந்து என்ற அபிமானமும் மனப்பூர்வமான இருதயமும் இருக்குமாகில் இதற்குரிய சக்தி உங்களிடமே இருக்கின்றது.

உங்களுடைய இருதய நாடிகளைப் பூர்வீக இருஷிகளின் இருதயத்துடன் இணைக்குக. இவர்கள் விட்டுச்சென்ற ஆன்மீகச் சுவடிகளை நன்றாகக் கற்றுணர்ந்து அதில் இரண்டறக் கலந்துவிடுங்கள்: உங்கள் கலை கலாசாரத்துக்கு முத்துமணிகளாயிருப்பவைகளைப் பேரபிமானத்துடன் தயங்காமல் ஏற்றுக்கொள்ளும்பொழுது உங்களுடைய சூக்கும சரீரத்தில் ஒரு சுதந்திரமான யதார்த்த இந்து உருவாகுவான். இந்தப் பரிபூரண சுதந்திரந்தான் ஒரு இந்துவின் பரம இலட்சியம். இதில்தான் உங்களுடைய ஐக்கியமும் திருப்தியும் சாஸ்வதமான இன்பமும் தங்கியிருக்கின்றது. இதை உணர்க; அனுபவிக்குக. வருங்கால உலகம் தனது ஆத்மாவின் குளிர்மைக்காக உங்களை நோக்கித்தான் வரப்போகின்றது. அதற்கிடையில் உங்களுடைய சொந்த கொதிவலிகளைத் தீர்த்த, ஒரு யதார்த்த இந்துவாகத் தலைநிமிர்ந்து நில்லுங்கள்.

— ஞான மண்டலம் — என்னும்
நூலிலிருந்து

## கங்காதரனெனும் ஞானி

கருணையும் அருளும் நிறைதிரு உருவம்
கங்காதரனெனும் அன்பின் சொரூபம்
மறைவழி வாழ்நெறி சொன்னவோர்
ஞானி — துயர்
மனங்களில் அமைதியை நிறைத்திட்ட
தோணி!

நீ ஏதோ ஒரு துறையில் சிறிதளவு அறிவு பெற்றிருக்கலாம். அதை வைத்துக்கொண்டு படித்தவன், அறிவுடையவன், நாகரீகமானவன் என்றெல்லாம் அகங்கரித்தால் அது உன்னைச் சர்வநாசத்தில் ஆழ்த்திவிடும்.

இன்று வரையில் நீ செய்துவரும் கர்மங்களில் அதிக பங்கும், உன்னுடைய சரீர மனம் இவைகளின் சக்தியைக் குறைக்கக்கூடியதும் சொந்த ஆத்மாவை வஞ்சிக்கக்கூடிய செயல்களும்தான் செய்து வருகின்றாய். ஒரு நாளைக்கு ஒரு தரமாவது தனிமையில் இருந்து ஆழமாய்ச் சிந்தனை செய், இந்த உண்மை விளங்கும். எனவே சிந்தனை செய்து தெளிவுபடுத்திய பிறகு மனம், சரீரம், புத்தி இவைகளைப் பலப்படுத்தக் கூடியதும், ஆத்மாவின் சுகத்திற்கேற்றவாறும் உரிய கர்மங்களை மாத்திரம் செய்தால் சுகமுடன் வாழலாம்.

ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்த மஹராஜ்

# செய்திகள்

## சத்குரு தியாகராஜ ஆராதனை

தமிழகத்துத் தஞ்சாவூரில் திருவையாறு எனும் தலத்திலே வருடாவருடம் சங்கீத மும்மூர்த்திகளுள் ஒருவரான சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளுக்கு இசையஞ்சலி நடப்பது மரபு. அதனை ஒட்டியதாக 1989ம் ஆண்டு இலங்கையிலும் இம்மரபு தோற்றுவிக்கப்பட்டது. இரண்டாவது தடவையாக இவ்வாண்டு ஜனவரி 5ம் திகதி மாலை ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய மண்டபத்தில் இசை மழை பொழியக் கேட்டோம். துறைபோன கர்நாடக இசைக் கலைஞர்கள் கலந்து கொண்டு தமது பணிவார்ந்த அஞ்சலிகளை பஞ்சரத்தின கீர்த்தனைகளை இசைத்ததன் மூலம் தெரிவித்தனர். இந்து சமய, கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை, ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய அறங்காவலர்சபை ஆகியன இணைந்து ஒழுங்கு செய்திருந்த இந்நிகழ்ச்சியை அமைச்சர் பி. பி. தேவராஜ் தொடக்கி வைத்தார். பல அமைச்சர்களும் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## தமிழிசை அரங்கு

ஸ்ரீ தியாகராஜ ஆராதனை நடந்து முடிந்த சூட்டோடு பொங்கலன்று வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் தமிழிசை அரங்கேறியது. தமிழ் முகங்களால் மண்டபம் நிரம்பி வழிந்தது. இந்து சமய கலாசார, தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவை, இராமகிருஷ்ண மிஷன் என்பன இணைந்து இதனை ஒழுங்கு செய்திருந்தன. விவிதகலாவிநோதன் எஸ். கே. பரராஜசிங்கம் தமிழிசை பற்றி ஆய்வு செய்தார். கலாசூரி திருமதி. அருந்ததி ஸ்ரீரங்கநாதன், திருமதி. பராசக்தி விநாயக தேவராஜா, திரு. என். கே. இரகுநாதன், திரு. வி. இராமேஸ்வரன் ஆகியோர் தமிழ் இசைத்தனர். நர்த்தன வித்தகி திருமதி கௌரி கண்ணனின் பரதநாட்டிய விருந்திற்கு திருமதி அருந்ததி ஸ்ரீ ரங்கநாதன் நட்டுவாங்கமும் கலாசூரி டி. இரத்தினம் மிருதங்கம் திரு. டி. வி. பிச்சையப்பா வயலின், த. சி. கோவிந்தராஜா தம்புரா இசைத்தனர்.

அப்சராஸ் தந்த ஜனரஞ்சக இசை அருமையாக இருந்தது. என். கே. இரகுநாதன், வில்லி மயில்வாகனம் ஆகியோர் பாடினர். செல்வி வித்யாகினி மோகன்ராஜ் மழலை மிழற்றினார்.

## ஸ்ரீ தனஞ்செயனின் பரத விரிவுரை

ஜனவரி 27ம் திகதி சென்னை கலாஞ்சலி நடனாலயாவின் கலைஞர்களான ஸ்ரீ தனஞ்செயன், திருமதி சாந்தா தனஞ்செயன், செல்வன் சஞ்சித் தனஞ்செயன் ஆகியோர் பரத அபிநயங்களோடு கூடிய விரிவுரையொன்றினை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடாத்தினர். திரளான பரத ஆர்வலர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்ச்சியை அமைச்சு ஒழுங்கு செய்திருந்தது. பேராசிரியர் கா. சிவத்தம்பி அமைச்சர் பி. பி. தேவராஜ் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

## இந்து மதப் பேருரைகள்

திணைக்களத்தின் பேருரைத் தொடரின் இருபத்திநான்காவது பேருரையை "இந்துசமய வரலாற்றில் ஆறுமுக நாவலர் பணிகள்" எனும் தலைப்பில் பேராதனைப்

பல்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளர் திரு. இரா. வை. கனகரத்தினம் எம். ஏ. அவர்கள் 08. 12. 90 மாலை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன கேட்போர் கூடத்தில் நிகழ்த்தினார். இந் நிகழ்ச்சிக்கு கொழும்பு பல்கலைக்கழக சமூகவிஞ்ஞானத் துறைத் தலைவர் திரு. சோ. சந்திரசேகரன் அவர்கள் தலைமை தாங்கினார்.

22. 01. 91 பிற்பகல் அதே கேட்போர் கூடத்தில் மதுரை சுவாமி தத்வானந்தா அவர்களின் 'இந்துமத வாழ்வியல் – சில சிந்தனைகள்' என்ற ஆங்கிலச் சொற்பொழிவு இடம் பெற்றது. அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் தலைமை வகித்தார்.

23. 01. 91 பிற்பகல் அதே கேட்போர் கூடத்தில் பேராதனைப் பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி. தில்லைநாதன் ''இந்துமதம் சவாலொன்றினை எதிர்கொண்டவாறு – 19ம், 20ம் நூற்றாண்டுச் சீர்திருத்தங்கள்'' எனும் தலைப்பில் பேசினார். இப்பேருரைக்கு அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் தலைமை வகித்தார்.

## தமிழுரை

திணைக்களத்தின் தமிழ் அலுவல்கள் பிரிவு ஒழுங்கு செய்திருந்த தமிழுரையில் ''இப்படியும் ஒரு தம்பியா?'' எனும் தலைப்பில் தமிழகச் சொற்பொழிவாளரான செல்வி. பார்வதி கணேஷன் உரை நிகழ்த்தினார். இவ்வுரை 5. 12. 90 ம் திகதி மாலை காப்புறுதிக் கூட்டுத்தாபன கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. திரு. திருமதி தேவராஜ் பிரதம அதிதிகளாக கலந்துகொண்டனர்.

## ஆங்கில உரைகள்

09. 12. 90 அன்று பிற்பகல் அதே கேட்போர் கூடத்தில் ''Contemporary Sri Lankan writings'' எனும் தலைப்பில் கலாநிதி ரஜீவ விஜேசிங்க, பேராசிரியர் தர்மதாச, திரு. கே. எஸ். சிவகுமாரன் ஆகியோர் ஆய்வு செய்தனர். அமைச்சர் பி. பி. தேவராஜ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

16. 12 90ம் திகதி பிற்பகல் அதே கேட்போர் கூடத்தில் ''Towards Multi-Culturalism in Sri Lanka'' எனும் தலைப்பில் பேராசிரியர் ஏ. ஜே குணவர்தன, செல்வி ராதிகா குமாரசுவாமி, கலாநிதி. நைஹானா ரஹீம் ஆகியோர் பேசினர். அமைச்சர் தேவராஜ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

# இன் கலைகள் வளர ஆதரவு வேண்டும்

அண்மையில் கொழும்பில் பரத நாட்டிய அரங்கேற்றங்கள் பல நடைபெற்றன. தமிழ் பெண்கள் மட்டுமல்லாது சிங்களப் பெண்களும் பரதக் கலையை நன்கு பயின்று பெரியோர் முன்னிலையில் அரங்கேற்றம் செய்தார்கள். இவ்வாரமும் சுபாஷினி சிவதேவன், சுபாஷினி பத்மநாதன் ஆகியோரின் நடன நிகழ்ச்சிகள் நடைபெற இருக்கின்றன.

இன்று தமிழ் நாட்டிலிருந்து இங்கு வந்துள்ள ஸ்ரீ தனஞ்செயன் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடனம் இடையிட்ட பரதவிரிவுரை ஒன்றினை நிகழ்த்தவிருக்கின்றார். சென்னை நடனாலயாவைச் சேர்ந்த இவரது குழுவினரும் இன்று காலை நடைபெறவிருக்கின்ற விரிவுரையிலே கலந்து கொள்வார்கள். அரங்கேற்ற நிகழ்ச்சிகளுக்கு தலைமை தாங்கி உற்சாகமூட்டுகின்ற இந்து கலாசார அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் செய்த ஏற்பாட்டிற்கு இணங்கவே இவ் விரிவுரை நிகழ்த்தப்படுகின்றது. இன்கலை வளர்ச்சியில் இந்து கலாசார அமைச்சு காட்டும் ஊக்கத்தையும், அளிக்கும் உதவியையும் கலை உலகம் பாராட்டுகின்றது. இன்கலைகள் வளரவேண்டுமாயின் மக்கள் வாழ்க்கையிலே இவை உரிய இடத்தினைப் பெறவேண்டும்.

கலைகளைப் பயிற்ற ஏற்பாடு செய்வதோடு கலைஞர்கள் தம் கலைத் திறமையையும், வித்துவத்தையும் அறிமுகப்படுத்தச் சந்தர்ப்பம் அளித்தாலே இவை விருத்தி காணும். இந்து ஆலயங்களும் தமிழ் அரசர்களும் ஆதரித்து வந்தனாலேயே இசை, நடனம் போன்ற எமது இன்கலைகள் அந்நிய ஆதிக்கம் மேலோங்கி நின்ற காலத்திலும் அழியாது இருந்தன. விஞ்ஞானத்தின் முன்னேற்றம் பல நவீன வழிமுறைகளைக் காட்டியபோதிலும் எமது இன்கலைகள் வளர்ச்சி கண்டே வந்திருக்கின்றன. அமைச்சர் தேவராஜ் எடுத்து வருகின்ற அருமுயற்சிக்கு இங்கு வாழ்கின்ற தமிழினம் பேராதரவு அளிக்கத் தவறாது.

(தினகரன்–ஆசிரியர் தலையங்கம் 27.1.1991)

# தமிழிசைப் பெருமை!

தமிழிசை பற்றிய தமிழக அறிஞர்கள் சிலரின் கருத்துக்களை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

கி. பி. ஏழாவது நூற்றாண்டு தமிழ் நாட்டு வரலாற்றிலே ஒரு பொற்காலம் ஆகும். அக்காலத்தில் தான் தமிழ் நாட்டில் இசைத்தமிழ் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடலாயிற்று. தமிழன்னை இசைமாரியில் குளித்தாள். இசை வெள்ளத்தில் மூழ்கினாள். அன்பு நெறியினை வளர்த்த அருளாளர்களாகிய நாயன்மார்களும், ஆழ்வார்களும் இசைத்தமிழைப் பக்திச் சுவையோடு கலந்து நாட்டிலே பரப்பினர். இந்து சமயத்தின் இரு கண்களாகிய சைவமும், வைணவமும் இசை மூலம் இசை பெற்றன.

— பேராசிரியர் அ. திருமலை முத்துசுவாமி

தமிழ், இயல், இசை, நாடகம் என மூன்று வகைப்படும். இசைக்காகத் தனியாக எண்ணற்ற இலக்கண நூல்களும் இலக்கிய நூல்களும் இருந்தன. இந் நூல்களைப் பண்டைக் காலத்தில் தமிழ் மக்கள் சிறப்பாக ஆராய்ந்து பயின்று மேன்மை அடைந்து வந்திருக்கிறார்கள். அக்காலத்தில் இசை வளர்ச்சிக்காகத் தமிழ்ச் சங்கங்களில் தனித்தனியே இடங்கள் இருந்தன. இசை வளர்க்க அமைத்த மண்டபங்களை இசைச்சூழல் என்று சொல்லுவார்கள். சங்க காலத்தை அடுத்துத் தோன்றிய மணிவாசகப் பெருமான் அருளிச் செய்த திருக்கோவையாரில், ''கடலில் ஆய்ந்த ஒண் தீம்தமிழின் ஏழிசை சூழல் புக்கோ'' எனத் திருவாய் மலர்ந்திருக்கின்றார். இது போல் நாடக ஆராய்ச்சிக்கும் தனியான மண்டபங்கள் இருந்தன. பண்டையத் தமிழர், தொட்டிலில் இருந்து சுடுகாடு செல்லும்வரை இசை இன்பத்தை நுகர்ந்து வாழ்க்கையில் ஊக்கமும் ஆக்கமும் பெற்று, பொன்றா இன்பந் துய்க்க நல்வாழ்வு நடத்தி வந்தனர்.

— தி. சா. சுந்தர ஓதுவா மூர்த்திகள்

மக்களாகப் பிறந்தோர் பேசும் மொழிகளுள் கூத்து, இசை, இயல் என்று இயல்பிலேயே வளர்ந்துள்ள மொழி, தமிழ் மொழி ஒன்றேயாம். தமிழ் இசையில் பிறந்து இசையில் வளர்ந்து நிலவும் சிறப்பினைப் பெற்றது. இசைக்கும் கூட 'பண்' என்று சிறந்த முறையில் பெயரமைந்ததும் செந்தமிழிலேயாம். தமிழர் குறித்த 'பண்' இராகமாக மாறி, மக்கள் குலத்துக்கு ராகு காலமாகி அலைக்கழிவு செய்கிறது.

— தவத்திரு குன்றக்குடி அடிகளார்

நானும் பிறந்தது முதல் இன்றுவரை பார்த்துக்கொண்டே வருகிறேன். பாட்டுக் கச்சேரி தொடங்குகிறது. வித்துவான 'வாதாபி கணபதிம்' என்று ஆரம்பஞ் செய்கிறார்; 'ராமநீ ஸமான மெவரு', 'மரியாத காதுரா', 'வரமுலொஸகி'...... ஐயையோ, ஐயையோ, ஒரே கதை.

எந்த ஜில்லாவுக்குப் போ, எந்த கிராமத்திற்குப் போ, எந்த 'வித்வான்' வந்தாலும் இதே கதைதான். தமிழ் நாட்டு ஜனங்களுக்கு இரும்புக் காதாக இருப்பதால், திரும்பத் திரும்பத். திரும்பத் திரும்பத். திரும்ப ஏழெட்டுப் பாட்டுக்களை வருஷக் கணக்காகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தோற்காது உள்ள தேசங்களிலே இந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டார்கள்.

— மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

இராகம் என்று கூறப்படுவது தமிழரால் பண் என்று குறிக்கப்பட்டு வந்தது. தமிழரின் பண்கள் எண்ணற்று இருந்தன.

வடமொழியில் கரகரப்பிரியா எனக் குறிப்பிடப்படுவதே படுமலைப் பாலைப்பண் என்றும், கல்யாணி எனும் ராகம், அரும் பாலைப்பண் என்றும் முன்னாளில் குறிப்பிடப்பட்டு வந்தது. அரிகாம்போதிக்குத் தமிழர் அளித்த பெயர் கோடிப் பாலைப் பண், பைரவிக்கு விளரிப் பாலைப்பண்; தோடிக்குச் செவ்வழி பாலைப்பண் - என இங்ஙனம் ராக இலட்சணங்கள் எவ்வளவோ தமிழில் இருந்தன; மறைந்தன.

— அறிஞர் அண்ணா

இசை என்று இங்கு கூறுவதைவிட நாம் தமிழ் இசை என்று கூறினால் அது மிகச் சிறப்புடையதாக இருக்கும். மேலும் தமிழ் என்பதற்கு 'இனிமை', 'அமுது' என்று பொருள் உள்ளதால் நமது தமிழிசையை 'இனிய இசை', 'அமுதூறும் இசை' என்று எழுதுவது பொருத்தமாகும். அதோடு, தமிழிசை நாம் கண்ட இசைகள் அனைத்திலும் இனியது, எழில் மிக்கது, சுவை நிறைந்தது, மென்மை வாய்ந்தது. இவைகளன்றித் தமிழ் என்ற சொல் மூன்று வரிவடிவங்களைக் கொண்டது. அதில் உள்ள முதல் வரிவடிவமாகிய 'த' என்பது வல்லினம். அடுத்த வரி வடிவம் 'மி' மெல்லினம். இறுதியில் உள்ள 'ழ்' இடையினம்; இவ்வாறு தம் மொழிக்குப் பெயரிடும் பொழுது வல்லினம், மெல்லினம், இடையினம், ஆகிய மூன்று தன்மைகளுடைய எழுத்தால் பெயர் வைத்தது சிறப்புடையது.

— நுண்கலைச் செல்வர் அ. இராகவனார்

இசைக்கலைக்குப் பேர்போனது தமிழ் நாடு. தமிழ் மொழியை இயல், இசை, நாடகம் என மூன்றாகப் பிரித்து, இசைக்கு முதன்மை தந்தது தமிழ்நாடு. இலக்கியங்களெல்லாம் பாட்டு, மருத்துவம் பாட்டு, ஜோஸ்யம் பாட்டு, பெண்கள் துக்கங் கொண்டாடி அழுவது கூட பாட்டு என்று எதை எடுத்தாலும் பாட்டு மயமாக-இசை மயமாக இசைத்து இசையைப் பரப்பியவர்கள் தமிழ் மக்கள். உலகில் வேறு எந்தத் தேசமுங் கண்டறியாத யாழ், குழல் போன்ற இன்னிசைக் கருவிகளைக் கண்டு பிடித்துக் கையாண்டு, மனிதர்களே அல்லாது, மற்ற ஜீவராசிகளும் கேட்டுமகிழ்ந்து பரவசம் அடையும்படி இன்னோசையை எழுப்பியவர்கள் தமிழர்கள்!

— நாரண துரைக்கண்ணன்

ஆதாரம் - தமிழிசைமணி சுந்தர ஓதுவா மூர்த்திகள் நினைவு விழா மலர் 1981.

பசி தாகமில்லாத இறைவனுக்கு வேளாவேளைக்கு நீரும், உணவும் அளிக்கிறீர்கள். தூணிலும், துரும்பிலும் குடியிருக்கத் தகுதியுடையவனுக்குத் தனித்ததோர் இடவசதியும் செய்து கொடுக்கின்றீர்கள். உங்களுடைய அதே உணர்வும் செயலும் மனிதனாகப் பிறந்தும், மனித உரிமையற்று திக்கற்று ஊர்ந்து செல்லும் மனித உருவங்களுக்கு அளிக்கப்படுமானால் அதுவே இறைவனுக்கு அர்ப்பணிக்கும் நிவேதனமாகும்.

ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா மஹராஜ்

# பண்டாரவளை
# ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

பெ. தங்கராஜா – பண்டாரவளை.

இலங்கையின் சுகாதார ஸ்தலமெனப் புகழ் பெற்று மிதமான சுவாத்தியத்தைக் கொண்ட பண்டாரவளை நகர், மலைகள் சூழ்ந்த அழகிய ஒரு சூழலிலே அமைந்துள்ளது.

நகருக்கு அணித்தாக ஒரு சிறு குன்றுப் பகுதியில் சிறப்புற அமைந்து, ஊவாவின் தலைசிறந்த ஆலயங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்.

சிறிய குக்கிராமமாகவும், மலைகளும், காடுகளும் நிறைந்தும் இருந்த இப் பிரதேசத்தில், தமிழகத்திலிருந்தும் நாட்டின் பிற பகுதிகளிலிருந்தும் வந்து குடியேறிய இந்துக்கள் ஆலயமொன்றின் அவசியத்தை உணர்ந்து, 1937ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டி இவ்வாலயப் பணிகளை ஆரம்பித்து வைத்தனர். இவ்வெண்ணத்தின் முன்னோடிகளான பல பெரியோர்கள் இன்று அமரர்களாகிவிட்டனர்.

இவ்வாலயத்தின் முதலாவது தர்மகர்த்தாவாக விளங்கிய திரு. ஆ. செ. முத்தையா பிள்ளை அவர்கள் ஆலயப்பிரதிஷ்டைகளுக்கான விக்கிரகங்களை தமிழகத்திலிருந்து கொணர்ந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாலயம் சிறப்புற அருளொளி பரப்பத் தொடங்கி 1943ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாவது கும்பாபிஷேகம் இடம்பெற்றது. தொடர்ந்து 1956ஆம் ஆண்டு மூலஸ்தானம் புனரமைக்கப்பட்டு மீண்டும் ஒரு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. முன் மண்டபம், வசந்த மண்டபம், உட்பிரகாரச் சுற்று என்பன விரிவுபெற்றன. மேலும் உள் மண்டப முகப்பில் துவாரபாலகர், வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ முருகப் பெருமான், அம்மன், கணேசர் சிலைகள் அமைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டன.

1971ஆம் ஆண்டில் மூலஸ்தானத்தில் ஏற்பட்ட சிதைவுகள் காரணமாக பாலஸ்தாபனம் செய்யப்பட்டு தொடர்ந்து ஒன்பது அடி உயரமான மூலஸ்தான கோபுரம் எழுப்பப்பட்டு அழகுமிக்க தெய்வச் சிற்பங்கள் வடிக்கப்பட்டன. இக்கோபுரம் எழும் பணிக்கென இந்தியச் சிற்பிகள், ஸ்தபதி நாகலிங்கம் என்பவரின் தலைமையில் வரவழைக்கப்பட்டிருந்தனர். திருப்பணி வேலைகள் முடிவுற்று 1973ஆம் ஆண்டு மீண்டும் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

1976ஆம் ஆண்டளவில் பொதுமக்களின் ஏகோபித்த விருப்பத்திற்கிணங்க அரசாங்க அதிபரின் தலைமையில் ஆலயத்திற்கான புதிய அமைப்பு விதிகள் உருவாக்கப்பட்டன. இவ்விதிகளின்படி ஐந்து வருடங்களுக்கென ஒரு தர்மகர்த்தா சபை தெரிவு செய்யப்படுகின்றது. வருடாந்தம் ஒவ்வொரு உறுப்பினர் நிர்வாக தர்மகர்த்தாவாக செயற்படுகின்றனர்.

புதிய அமைப்பு விதிகள் அமைக்கப்பட்டபின் ஒவ்வொரு ஆண்டும் நிர்வாகத்தைப் பொறுப்பேற்கும் தர்மகர்த்தாவும் தமது சக்திக்கு மேம்பட்ட பல காரியங்களை ஆற்றி ஆலயம் பொலிவுற வகை செய்தனர். அந்தப் பட்டியலில் திருவாளர்கள் ஆர். ஜி. பெருமாள், டாக்டர் சி. பரஞ்சோதி, ஆர். பூவலிங்கம், தி. இராஜு, என். ரெங்கசாமி, பி. குமாரசாமி, எஸ். சண்முகம்பிள்ளை, என். இராஜேந்திரன், என். தியாகராஜா ஆகியோரின் உயர்பணிகள் போற்றத்தக்கன.

1983ஆம் ஆண்டு ஏற்பட்ட நாடளாவிய கலவரங்களில் ஆலயம் முழுமையாக சிதைந்து சின்னாபின்னமாகியது. மீண்டும் இவ்விடத்தில் ஒரு ஆலயம் எழுந்து இந்துக்களும் ஏனைய பக்தர்களும் ஒன்றுகூட முடியுமோ என்ற சந்தேகத்தை கலவரம் விட்டுவைத்தது. ஆயினும், தெய்வகடாட்சத்தின் மகிமைதான் என்னே! திரு ஆர். ஜி. பெருமாள் முன்னின்று ஆலயத்தை புனருத்தாரணம் செய்வதில் முழுமையாக உழைத்தார். சோர்ந்திருந்தோரும் சேர்ந்து இயங்கினர். அருள் வெள்ளம் அலைமோத அதே ஆலயம் இன்னும் பொலிவோடு எழுந்தது. 1984ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றபோது இப்பகுதி இந்துக்கள், ஏனைய பக்தர்கள் அடைந்த இன்பத்தின் எல்லை கரைபுரண்டதை நாம் மீட்டுப் பார்க்கிறோம். அதற்குப் பின் ஒவ்வோராண்டும் ஆலயம் அழகு பெற்றுக்கொண்டேயிருக்கிறது. திரு. எஸ். சண்முகம்பிள்ளை அவர்களின் நிர்வாகத்தில் வெளிச் சுற்றுமதில் அமைக்கப்பட்டது; திரு. என். இராசேந்திரன் அவர்களின் நிர்வாகத்தில் வழிப்பிள்ளையார், தண்டாயுதபாணி சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. இவரது காலத்தில் ஊவாமாகாணத்திலேயே முதற்தடவையாக மகாயாகமொன்று இவ்வாலயத்தில் நடைபெற்றது. நாட்டின் பிரபலசிவாச்சாரியார்கள் கலந்து அன்பும், அறமும் செழித்தோங்க இந்த யாகத்தை நிறைவேற்றி வைத்தனர்.

தற்போது ஆலயத்தின் அருகிலே கலாசார மண்டபம் ஒன்று எழுந்துகொண்டிருக்கிறது. இம்மண்டபம் முழுமைபெற முன்னின்றோர் வரிசையிற் இந்துசமய, கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், ஊவாமாகாண சபை உறுப்பினர் மு. சச்சிதானந்தன் ஆகியோரின் பங்கும், பணியும் போற்றத்தக்கவை.

ஆலய மண்டபத்தில் வார இறுதி நாட்களில் அறநெறிப்பாடசாலை இயங்குகிறது. நகரின் ஆசிரிய இளைஞர்கள் மாணவ மாணவியர்களுக்கு சமய பாட வகுப்புகளை விருப்புடன் நடாத்துகின்றனர்.

தற்போது இவ்வாலயத்தின் நிர்வாக தர்மகர்த்தாவாக திரு. ஆர். ஜி. பெருமாள் அவர்கள் விளங்குகின்றார். வேகமாகக் கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் கலாசார மண்டபம் இவரது நிர்வாகத்தின்போதே திறக்கப்பட்டுவிடும் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி. அதன்பின் இம்மண்டபத்தை மையமாகக் கொண்டு கல்வியும் கலைகளும் பெருகும் என பண்டாரவளை வாழ் இந்துப் பெருமக்கள் ஆவல் கொள்கின்றனர். அந்த மண்டப மேடையில் எமது இளம் சிறார்களின் பண்ணும் பரதமும் ஒலிக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

ஒரே ஒரு குறையாக இருந்த நீர்ப் பிரச்சனையை திரு. ந. தியாகராஜா அவர்கள் முன்னின்று கிணறு வெட்டித் தீர்த்து வைத்துவிட்டார். முருக பக்திக்கு முன்னால் முடியாததும் உண்டோ?

பண்டாரவளை நகரின் ஒரு உயர்ந்த இடத்திலே நின்று இந்த ஆலயத்தைப் பார்க்கும்போது அழகுறத்தோன்றும் இதன் பின்னணியில் பலரின் இடைவிடாத பக்தியும், உழைப்பும் இந்து தர்மத்தின்பால் கொண்ட ஈடுபாடும் நிறைந்திருக்கின்றன. அத்தனை பேரையும் இங்கே குறிப்பிடுவதற்கில்லை. ஆயினும் ஒரு ஆலயம் எழுந்து சிறக்கப் பணிசெய்த பெரியோரை நாம் மறப்பதற்கில்லை. இன்று வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணியனை நம்பி வந்து தமதுமனத்துயர்தீர்க்கும் பக்தர்களின் எண்ணிக்கை பெரியது. தினமும் முறைதவறாமல் பூஜை புனஸ்காரங்கள் சிறப்புற இயங்குகின்றன. இந்த ஆலயத்தின் அமைப்பும் சூழலும் இனம்புரியாத அமைதியைத் தருகின்றன. மங்கல நிகழ்ச்சிகள், விழாக்கள், பேருரைகள் என்று ஆண்டு முழுதும் ஆலயம் நிரம்பி வழிகிறது. தெய்வ சாந்நித்தியம் என்ற தேன் இருக்கும் இடத்தை நாடி பக்த தேனீக்கள் குழுமுவது வியப்பதற்கில்லை.

இந்த ஆலயத்தின் வாயிலுக்கு செல்கின்ற வேளை ''யாமிருக்கப் பயமேன்?'' என்று முருகன் வினவுவது போன்ற பெருமிதம் ஏற்படுகிறது. உண்மைதான் அவனிருக்கப் பயமேன்?

# மகா சிவராத்திரி

## உணர்த்திடும் தத்துவ உண்மை

கருணைக் கடலாம் கருணாமூர்த்தியின் பரம்பொருள் தன்மையைப் புலப்படுத்தும் விரதமே மகா சிவராத்திரியாகும். தேவியின் விரதங்களில் சிறப்பான விரதம் நவராத்திரியாகும். அதுபோன்று உலகின் பரம் பொருளாம் சிவனின் விரதங்களில் தலைசிறந்த விரதம் சிவராத்திரி விரதமாகும். மாசி மாதத்தில் வரும் தேய்பிறை பதினான்காம் நாளிலே அதாவது கிருஷ்ண பட்சத்துச் சதுர்த்தசியில் வரும் விரதமே இவ் விரதமாகும்.

மகா சிவராத்திரி விரதம் இந்துக்களால் மிகவும் முக்கியமாகவும், புனிதத் தன்மையுடனும் அனுட்டிக்கப்படுகின்றது. இவ்விதம் அனுட்டிக்கப்படும் புண்ணிய விரதம் எமக்குப் புலப்படுத்தும் மூல தத்துவ உண்மைகள் எவை என நோக்குவது சாலச் சிறந்ததாகும். முழுமுதற் கடவுளாம் சிவன் எங்கும் நிறைந்தவன், என்றும் உள்ளவன், என்றும் அழிவற்றவன், பெருங் கருணைத் திறன் கொண்டவன், தனக்கு மேல் எவரையும் கொண்டிராத தனிப் பெருந் தலைவன். அவனே மங்களம் பொருந்திய சிவன் என அழைக்கப்படுபவன் ஆவான். அத்தகைய பரம் பொருளின் உண்மைத் தன்மையை பிரமா, விஷ்ணு போன்ற தேவர்களும் மானிடர்களும், ஏனைய ஜீவராசிகளும் உணர்ந்து அவன் அடியினைப் பணிந்து உய்வு பெறுதல் வேண்டும் என்பதைப் புலப்படுத்தும் வகையில் இவ்விரதம் அமைந்துள்ளது.

அடுத்து, நான் என்ற ஆணவமே அழிவின் மூல காரணியாகும். அதுவே அனைத்து ஜீவராசிகளின் நற்பேறுகளுக்கும் தடையாகவிருக்கும் வஸ்துவாகும். நான் என்ற ஆணவச் செருக்கை எவன் தன் மனதிலிருந்து அகற்றுகின்றானோ அவனே வாழ்வில் உய்வு பெற்று நற்கதியை அடைவான். உயிர்களை துன்பச் சுமைகளுக்கும் பிறவித் துன்பத்திற்கும் மூல காரணி ஆணவ மலமேயாகும். அம்மலம் அடக்கம் பெற வேண்டும் என்பதனையும் மகா சிவராத்திரி விரதம் புலப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. ஆகவே மகா சிவராத்திரி விரதமானது சிவனின் பரம் பொருள் தன்மையையும், ஆணவ மலத்தின் அடக்கத்தையும் தத்துவ ரீதியாக எமக்கு எடுத்துக் காட்டுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இத் தத்துவ உண்மைகளைத் தெளிவுபடுத்தும் வகையில் பின்வரும் புராணக் கதை அமைந்துள்ளது. ஓர்முறை செல்வத்தின் நாயகி திருமகளின் நாயகன் திருமாலும், கல்விக்கு அதிபதியாம் சரஸ்வதியின் நாயகன் பிரமாவும் தம்முள் யார் பெரியவர்கள் என்ற விவாதத்தில் இறங்கினர். தம்முள்ளும் மேலானவரும் சகல ஜீவராசிகளையும் உலகங்களையும் காத்தும் படைத்தும் இயக்கியும், கட்டுப்படுத்தியும் அழித்தும், அருளியும் தனக்கு நிகரற்ற தனிப்பெரும் தலைவனின் பரம் பொருள் தன்மையை எள்ளளவும் சிந்தியாது பிரம்மாவும், விஷ்ணுவும் தம்முள் யார் பெரியவன் என்ற வாதத்தில் இறங்கி கைகலப்பில் ஈடுபட்டனர். கைகலப்பு பெரும் போராக மாறிற்று. பல நாட்களாகப் போர் தொடர்ந்து சென்றது. கடும்போர் மத்தியிலும் பிரம்மாவும், விஷ்ணுவும் உண்மை நிலையினை ஆணவச் செருக்கால் உணர்ந்திடாது போர் புரிந்தனர். இந் நிலையில் இருவருக்கும் உண்மை நிலையைப் புரியவைத்தும், தனது தனிப் பெரும் பரம் பொருள் தன்மையைக் காட்டுவதற்குமாகச் சிவன் இருவர் மத்தியிலும் இலிங்க வடிவமான ஓர் ஒளிப் பிழம்பாக ஆகாயத்

தையும், பூமியையும் அளாவியதாய் அவர்கள் முன்தோன்றினார். தம்முன் தோன்றிய சோதிப் பிழம்பை கண்டு இருவரும் திகைத்து நின்றனர். அப்பொழுது ஓர் அசரிரி ஒலியொன்று கேட்டது. இவ்வொளிப் பிழம்பின் முடி அல்லது அடியினை எவர் சென்றடைந்து திரும்புகின்றனரோ அவரே உலகின் பரம் பொருள் என்ற ஒலி கேட்டது. இதனைச் செவிமடுத்த பிரம்மாவும், விஷ்ணுவும் முறையே அன்னப் பட்சி வடிவாகவும், பன்றியாகவும் உருவெடுத்து பிரம்மா அன்னப்பறவையாக ஆகாயத்தை நோக்கியும், திருமால் பன்றி வடிவாக உருவெடுத்து நிலத்தைக் குடைந்தும் முடியினையும், அடியினையும் காணப் புறப்பட்டனர்.

விஷ்ணு நெடுந்தூரம் வரை சென்றும் அடியைக் காணாது திகைத்தார். உண்மை நிலையினை உணர்ந்தார். தமக்குள் ஏற்பட்ட ஆணவத் தன்மையை அடக்கம் காணச் செய்தார். தம்மிலும் மேலானவன் பரம்பொருள் சிவன் எனக் கண்டு மீளவும் சோதிப் பிழம்புதோன்றிய இடத்திற்கு வந்து அவ்வடி பணிந்து தொழுது நின்றார். ஆனால் பிரமனோ ஆகாய மார்க்கமாக நெடுந்தூரம்வரை சென்றார். முடியினைக் காணாது தொடர்ந்து தன் பயணத்தை மேற்கொண்டார். வழியில் சிவனின் தலையிலிருந்து தவறி விழுந்து பூமி நோக்கி வந்த தாழம் பூ ஒன்றினைக் கண்டார். தாழம் பூவிடம் எவ்விடமிருந்து வந்தாய் என விசாரித்து அறிந்துகொண்டார். நான் என்ற செருக்குத் தன்மை மேலிட்டால் தவறான வழியில் தானே உலகின் பரம்பொருள் என நிரூபணம் செய்ய தாழம் பூவினையும் பொய்ச்சாட்சியாக அழைத்து வந்தார் சோதிப் பிழம்பு தோன்றிய இடத்திற்கு. எல்லாவற்றையும் உணரும் சக்தி படைத்த சிவன் பிரம்மாவின் பொய்மையை வெளிப்படுத்தியதுடன் அவனின் ஆணவச் செருக்கினையும் அடக்கம் காணச் செய்தார். பொய் சாட்சியாக பிரமாவுக்குத் துணை புரிந்த தாழம் பூவினைத் தமது சிவ பூசைக்கு இனிமேல் ஒருவரும் பாவித்தல் கூடாது என இயம்பியதுடன் பிரமா தவறான வழியில் பொய்யான விடயத்தை நிரூபணம் செய்ய எத்தனித்தமைக்காக அன்றுமுதல் மானிடர் எவரும் அவனுக்குக் கோயில் கட்டி வழிபாடு செய்யக்கூடாது எனவும் கூறியருளினார். பிரமா நான் என்ற ஆணவத்தை அடக்கம் காணச் செய்யாத காரணத்தால் வழிபாட்டுத் தெய்வ நிலையில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டார். திருமால் தமது ஆணவத்தை அடக்கம் செய்த காரணத்தால் சிவனினால் அன்று முதல் அனைத்துலகத்தவரும் ஆலயம் எழுப்பி அவனை வழிபாடு செய்யலாம் என்ற நற்பேற்றையும் பெற்றுக்கொண்டார். ஆகவே ஆணவ முனைப்பு, தீமையையும் அழிவையும் தந்திடும் என்பதற்கு இக்கதையில் பிரமாவின் நிலைமூலம் எமக்கு உணர்த்தப்படுகின்றது. ஆணவ மலத்தை அடக்கம் செய்தால் நன்மை கிடைக்கும் என்பதற்குத் திருமாலின் மூலம் இக் கதையில் உணர்த்தப்படுகின்றது. பிரமாவுக்கும், திருமாலுக்கும் தம் பரம்பொருள் தன்மையைப் புலப்படுத்திட சிவன் சோதிப் பிழம்பாகத் தோன்றிய நாளே மகா சிவராத்திரி தினமாகும்.

எனவே மானிடராகிய நாமும் இவ்வுண்மைத் தன்மையை நன்கு புரிந்து அதன்படி செயற்பட்டால் நன்மை கிட்டும். எமது உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் நான் என்ற அகந்தையை ஒழித்து எல்லாவற்றுக்குமேலானவன் சிவன் என உணர்ந்து அவனைத் தினமும் மெய் அன்புடன் வணங்கி நற்கதியைப் பெற்றிடுவோம்.

ஆக்கம்:

வத்துகாமம் சைவ முன்னேற்றச் சங்கம்

---

மனித வாழ்க்கை அருவருக்கத் தக்க நிலைக்குத் தாழ்ந்துவிடும் பொழுதும் சமுதாயப் பண்புகள் நஷ்டப்படும் பொழுதும் இவ்வுலகில் மனிதனாகப் பிறப்பதற்குரிய சந்தர்ப்பம் கிடைத்த நன்றிக் கடனுக்காகவாவது நாம் மேலான வாழ்வு வாழக் கடமைப்பட்டிருக்கிறோம். இதை உணராமல் செய்யுஞ் செயல் எல்லாம் தன்னைத் தான் வஞ்சிப்பதாகும்.

— ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா மஹராஜ்

# மாசி மாதம் மகத்துவம் பெறும்

## "மாமாங்கம்"

தை மாதத்தில் வரும் தைப்பூச நாள் இந்துக்களுக்கு எவ்வளவு சிறப்பு வாய்ந்ததோ அதே போன்று மாசி மாதத்தின் பௌர்ணமியில் வரும் மாசி மகம் மிகவும் பேறுடையது. நட்சத்திரங்களில் மாசி மாதத்தில் வரும் மகம் நட்சத்திரம் புனிதமும், அதே வேளையில் பல பாவங்களையும் அகற்றும் தன்மையும் வாய்ந்தது. என ஞானிகள் கூறுவர். இதற்கு பல புராண இதிகாச கதைகளும் ஆதாரங்களும் மெருகூட்டுகின்றன.

பார்வதி தேவியாருக்கு வழங்கும் பெயர்களுள் மகமாயி என்பதுவும் ஒன்றாகும். இந்த மக நாளன்றே பார்வதி தேவியார் புவியில் அவதாரம் எடுத்தார் என்று புராணம் கூறுகின்றது. சிவபெருமானை மணம் செய்வதன் பொருட்டு அன்னை மகமாயி புவியில் தோன்றிய பொன்னாள் இந்நாள். தக்கன் செய்த அருள் தவத்தால் அன்னை அவனுக்கு மகளாக அவதரித்தாள். அலஹபாத் நகருக்கு அண்மையில் உள்ள காளிந்தி என்ற இடத்தில் கங்காநதியின் கிளையான யமுனை ஆற்றிலே அழகிய தாமரைப் பூவின் மத்தியிலே நன்மை, செழிப்பு, வல்லமை, புனிதம் பொருந்திய வலம்புரிச் சங்கு ஒன்று காணப்பட்டது. யமுனை ஆற்றங்கரை வழியே சென்ற தக்கன் இதழ் விரிந்த தாமரைப் பூவின் மத்தியிலே வலம்புரிச் சங்கு இருப்பதைக் கண்டு அதனை எடுக்க கைகொண்டு சென்றபோது அச்சங்கானது மிகவும் அழகான பெண் குழந்தையாக மாறியது. இதைக்கண்ட தக்கனின் மனைவி குழந்தையை எடுத்துக்கொண்டாள். அக்குழந்தையை தம் சொந்தக் குழந்தையாக கருதி தாட்ஷாயினி என நாமமிட்டு வளர்த்து வரலாயினர். தக்கன் இக் குழந்தையைப் பெற்ற தினமே மாசி மக நாளாகும். அதனாலேயே அம்மன் கோயில்களில் இத்தினத்தில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெறுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

அடுத்து முருகப்பெருமானிடத்தில் பிரணவப் பொருளை சிவபெருமான் கேட்ட தினம் இத்தினம் என்ற ஐதீகமும் உண்டு. காவேரியின் வடகரையில் அமைந்துள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள சுவாமி மலை என்ற திருத்தலத்திலே இந் நிகழ்ச்சி நடந்ததாகக்கூறுவர். சுவாமிக்கு உபதேசம் புரிந்த காரணத்தினால் குன்றின் உச்சியில் அமைந்திருக்கும் குமரவேள் ஆலயம் சுவாமிமலை என்னும் பெயருடன் விளங்குகின்றது. இத்தலத்திலும் முருகன் ஆலயங்களிலும் இந்த மாசி மக நாளில் விசேட பூசைகளும் ஆராதனைகளும் நடைபெறுவதை இன்றும் காணலாம். தென் இந்தியாவில் கும்பகோணத்தில் இத்தினம் மிக விமரிசையாக கொண்டாடப் படுகின்றது. இங்கமர்ந்த விசுவநாதர் ஆலயத்தின் தென்பகுதியில் மகாமகக் குளம் உண்டு. இக்குளத்தில் இந்த மாசி மக நாளில் 9 புனித தீர்த்தங்கள் இக் குளத்தை வந்தடைவதாக இன்றும் நம்பிக்கையுண்டு. இங்குள்ள மகாமகக் குளம் கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதா, காவேரி, குமாரி, மயோஷ்னி, சரயூ ஆகியவைகளில் உள்ள புனிதம் பொருந்திய தீர்த்தங்கள் இந்த மக நாளில் வந்து சேர்வதாக நம்பிக்கையுள்ளதால் இத்தினத்தில் எல்லாப் பாகங்களில் இருந்தும் பக்தர்கள் ஒன்று கூடி இத் தலத்தை தரிசித்து தீர்த்தம் ஆடிப் பலன் பெறுவர். இதைவிட மூவரது தேவாரச் சிறப்புபெற்ற திருமறைக்காடு, சுவர்ணமுகி ஆற்றின் கரையில் அமைந்த காளத்தி

என்ற திருத்தலங்களும் மாசிமகம் கொண்டாடும் விசேட தன்மை பொருந்திய திருத்தலங்களாகும்.

இலங்கைத் திருநாட்டில் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலும், மற்றும் அம்மன் ஆலயங்களிலும் மாசி மக நாள் பேறுபெற்ற நாளாகக் கருதப்பட்டு போற்றி துதிக்கப்படுவதோடு அபிடேக ஆராதனைகளும் இடம் பெறுகின்றன. முருகன் ஆலயங்களிலும் இத்தினம் பேணப்படுகின்றது.

ஒவ்வொரு மாதத்திலும் மகம் நட்சத்திரம் வருவதாயினும் மாசி மாதத்து மகம் நட்சத்திரம் பேறுபெற்றது போல் பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறை வரும் மாசி மகம் "மாமாங்கம்" என்ற பெயரோடு கொண்டாடப்படுகின்றது. இத்தீர்த்தம் பல பாவங்களையும் போக்கக் கூடியது என பெரியவர்கள் கூறுவர்.

புராண இதிகாசங்களால் போற்றப்படும் இம் மாசி மக நாள் மாங்கல்ய நாள் எனவும் கூறுவர். இத் தினத்தில் வீடுகள், ஆலயங்கள் தோறும் ஒளியேற்றி, சிலர் உபவாசம் இருந்து விரதம் பூண்டு உமா தேவியையும் சிவனையும் போற்றி துதிப்பதோடு முருகனுக்கும் அபிடேக ஆராதனை ய்கின்றனர்.

இத்தகைய சிறப்பும் புனிதமும் பெற்ற மாசி மகநாள் 28. 02. 1991 வியாழக்கிழமை பூரணை சேர்ந்து வருவது மிகவும் பேறுபெற்றது. இத்தகைய புனித நாளில் இந்துக்களாகிய நாம் ஆலயங்கள், வீடுகள், யாவும் ஒளியேற்றி, விரதம் இருந்து ஆதி பராசக்தியின் அற்புத வடிவான மகமாயி உமாதேவியின் இன்னருளைப் பெறுவதோடு எமது தொல்லைகள், துயர்கள் நீங்க அவளை துதிப்போமாக.

எஸ். தெய்வநாயகம்

---

உனது வாழ்வில் நிரந்தரமான சுகத்துடன் நிம்மதியாக வாழ முடியுமா? என்ற விஷயத்தில் எள்ளளவும் சந்தேகப்படாதே. கருகிய கரி நெருப்புடன் சம்பந்தப்படும் பொழுது அதன் இயற்கையான கருமை மாறி ஒளிர்கின்றது. அதே போன்று உனது மனம் தெய்வீக ஒளியில் கலந்திருந்தால் ஜீவசுகம் நிறைந்த சம்பூரண மனிதனை உன்னில் காணலாம்.

இராவணன், கம்ஸன், துரியோதனன், சூரன் போன்றவர்களுக்குத் தண்டனைக்குப் பின்பு தான் பாவமன்னிப்புக் கிடைத்திருக்கிறது.

பொருளின் தாரதம்மியங்களைக் கொண்டு வாழ்க்கையின் உயர்வு தாழ்வை நிச்சயிப்பது மடமை. மனதின் தராதரத்தைக் கொண்டு தான் அதை நிச்சயிக்க வேண்டும். மனத்தெளிவுடையவனுக்கு இலாபமும் நஷ்டமும் ஒன்றேயாகும்.

உனது கெட்டித்தனத்தால் பலதும் சாதிக்க முடியலாம். ஆனால் சாதித்ததை நிம்மதியுடன் சம்பூர்ணமாய் அனுபவிப்பதற்குத் திருவருள் வேண்டும் என்பதை அறிக.

உலகத்தில் மனிதத் தன்மை வளரும் அளவிற்குப் பிரச்சனைகள் தானாகவே குறையும். ஆகையால் சகலவிதமான செயல்களும் மனிதத் தன்மையை வளர்த்தெடுக்கும் முறையில் அமையவேண்டும்.

— ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா மஹராஜ்

# புத்தக உலகம்

கொழும்பு குமரன் அச்சக வெளியீடாக இரண்டு நூல்கள் அண்மையில் இலவசமாக விநியோகிக்கப்பட்டன. அருள்நெறி ஆர்வலர் வே. ந. சிவராஜா அவர்கள் திருகோணமலை சிவயோக சமாஜத்தின் சார்பில் இவற்றை இலவசமாக விநியோகிக்கின்றார்.

## 1. ஞானச்சுடர்:

திருகோணமலையில் சிவயோக சமாஜம் எனும் ஆன்மீக மையத்தின் கீழே அமர்ந்து நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக அருள் அலைகளைப் பரப்பி அண்மையில் மகாசமாதி அடைந்த மகானான ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா அவர்களைப் பற்றியும் அவர்கள் தமது பக்தர்களைக் காத்து அருளிய திறம் பற்றியும் இந்நூல் விளக்குகிறது. ஒரு மகானோடு தொடர்புபடும்போது பெறும் அருள் இன்பத்தின ஆழத்தை நாம் இந்நூலில் காணலாம்.

வெளியிடுபவர்: திரு. இரா. இரவிச் சந்திர மோகன், திருகோணமலை.

## 2. வேதநூல்:

வேத, ஆகம, தந்திரங்கள், உபநிடதங்கள் அனைத்தையும் பெயர் விபரங்களோடும் உள்ளடக்கம் பற்றி விளக்கியும் ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தா அவர்கள் வழங்கியுள்ளார். இந்துமதம் கூறாத எதுவுமே இல்லை என இந்நூல் விளக்குகிறது.

எழுதியவர்: ஸ்ரீமத்சுவாமி கெங்காதரானந்தா மஹராஜ், திருகோணமலை.

## தமிழ் சாகித்திய விழா

தமிழ் இலக்கியவாதிகளுக்கும், இலக்கிய ஆர்வலர்களுக்கும் ஆதங்கத்தையும், ஏக்கத்தையும் ஏற்படுத்தியிருந்த தமிழ் சாகித்திய விழா மார்ச்மாதம் 29, 30, 31ம் திகதிகளில் கண்டியில் நடைபெறுவதற்கான ஒழுங்குகளை இந்துசமய, கலாசார திணைக்களத்தின் தமிழ் அலுவல்கள் பிரிவு முனைப்பாக மேற்கொண்டு வருகிறது.

புத்தக, சிற்ப, சித்திர, கண்காட்சி இலக்கியக் கருத்தரங்குகள், விழா மலர் வெளியீடு, விருது பெற்ற இலக்கியகர்த்தாக்களுக்கு வாழ்த்தும் பாராட்டும், கலை நிகழ்ச்சிகள் என நிகழ்ச்சிகள் அமோகமாக அமையவுள்ளன.

கௌரவ பிரதம மந்திரி டி. பி. விஜேதுங்க அவர்கள், ஏனைய பல அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், மத்திய மாகாண முதலமைச்சர், உறுப்பினர்கள், பிரமுகர்கள் கலந்து கொள்ளும் இவ்விழாவை இந்து சமய, கலாசார, தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் வைபவரீதியாக தலைமை தாங்கித் தொடக்கி வைக்கவுள்ளார்.

இம்முறை 1981ம் ஆண்டுமுதல் 1988வரை வெளிவந்த நூல்களுக்கும் 1989ம் ஆண்டு

வெளிவந்த நூல்களுக்கும் என இரு பிரிவுகளில் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

அமைச்சின் பெரு முயற்சியினால் தொடக்கி வைக்கப்படும் இக் கைங்கரியம் வருடா வருடம் தொடரும் என்ற நற்செய்தி தமிழ் இலக்கிய உள்ளங்களில் பால் வார்க்கிறது.

விழாக்கோலம் பூண்டு, தமிழ் ஒலிக்கப் போகும் மலையகத் தலைநகராம் கண்டி மாநகரில் மார்ச் மாதத்தில் தமிழ் வெள்ளம் பெருக்கெடுக்கும் என நாம் எதிர்பார்க்கலாம்.

## எதிரொலி

மகாசிவராத்திரிதினம் தொடர்பான இந்துக்களின் குழப்பத்தைப்பற்றி ஒரு அன்பர் எமது திணைக்களத்திற்கு எழுதிய கடிதத்தை இங்கே பிரசுரிக்கின்றோம். இது போன்ற பிரச்சினைகளில் இந்துசமய அறிஞர்கள் ஒருமனதான முடிவெடுப்பது சாலப் பொருந்தும் என்பதால் சான்றோர், பெரியோர் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

## மகாசிவராத்திரி விரதகால நிர்ணயம்

*1990 / 91ம்* ஆண்டுக்குட்பட்ட தமிழ் பிரமோதூத வருடத்துக்குரிய மகாசிவராத்திரி விரதகால நிர்ணயத் திகதியில் இரு வேறுபட்ட கணிப்புகளும், கருத்துக்களும் நிலவுகின்றன.

1. இலங்கையில் வெளியாகும் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் மகாசிவராத்திரி விரதம் 12.02.1991 தமிழ் தைமாதம் 30ம் திகதி செவ்வாய்க்கிழமை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2. சுப்பிரமணிய ஐயர் திருக்கணித பஞ்சாங்கத்தில் 14.03.1991 தமிழ் மாசி மாதம் 30ம் திகதி வியாழக்கிழமை என்று குறிப்பிட்டுள்ளார்.

நமது இந்து சமயத்தவர்களுக்குரிய உற்சவங்கள், கிரியை அனுட்டான நாட்கள் முக்கிய காலங்கள் என்பவை மேற்குறித்த பஞ்சாங்கங்களினாலேயே ஆண்டு தோறும் கணிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன.

இந்த நிலையில் மகாசிவராத்திரி தினம் சம்பந்தமாக இருவேறு கணிப்புக்கள் வெளியிடப்பட்டுள்ளமையால் இந்து சமய மக்கள் வேதனைக்குள்ளாகின்றனர்.

எனவே இந்த விடயத்தினை எமது சபையினர் தங்களது கவனத்திற்குத் தயவுடன் சமர்ப்பிக்கின்றனர்.

ஒப்பம்: தலைவர் திரு. வி. விஸ்வலிங்கம், செயலாளர் திரு. க. ஸ்ரீஸ்கந்தராஜா, சைவ மகாசபை, கருவாஞ்சிக்குடி.

நீ இறைவனை நோக்கிக் கீழ் வருமாறு பிரார்த்தனை செய், என்னுடைய பலவீனத்தாலும், அஞ்ஞானத்தாலும் பல குற்றங்கள் செய்தும், நல்லது பலதும் செய்யாமலும் விட்டு விட்டேன். கருணை கூர்ந்து என்னை மன்னித்து விடு. இங்ஙனம் உன்னுடைய நெஞ்சுருகும் வண்ணம் பிரார்த்தனை செய்து வந்தால் இந்தப் பிறவியிலேயே பாவங்கள்நீங்கி திருப்தியும் சுகமும் பெறலாம்.

— ஸ்ரீ மத் சுவாமி கெங்காதரானந்தா மஹராஜ்

# இந்து உலகம்

## தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்க சைவசித்தாந்த சங்கத்தின் ஸ்தாபகரும் தலைவருமான சுவாமி சிவானந்த நாவலர் தனது 68ஆம் வயதில் கடந்த ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி அமரத்துவம் அடைந்தார். சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடரான இவர் தனது பதினைந்தாவது வயதிலேயே பேச்சு வன்மை மிக்கவராக விளங்கினார். தென்னாபிரிக்காவின் முதலாவது இந்து விவாக பதிவாளராக நியமனம் பெற்றதோடு, சைவ சித்தாந்த சங்கத்திற்கு பத்தாயிரம் உறுப்பினர்களையும் சேர்த்தார். நாவலர் அவர்கள் நேட்டால் மருத்துவ கல்லூரி ஆய்வுகூடத்தில் காற்றுப் புகாத ஒரு கண்ணாடி அறைக்குள் ஒரு மணி நேரம் மூச்சடக்கி இருந்து தமது யோக வலிமையை நிரூபித்தார். தென்னாபிரிக்கா வாழ் இந்துக்கள் அன்னாரின் மறைவை தாளமுடியாத இழப்பாகக் கருதினர்.

## ஜப்பான்

ஜப்பானில் மத ஆர்வம் பெருகி வருகின்றது. பௌத்தத்திலிருந்தும், ஷின்டோவிலிருந்தும் உருவான இரண்டு லட்சத்து முப்பதாயிரம் மதப் பிரிவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஜப்பானிய கலாசார அமைச்சு அறிவிக்கிறது.

## சிங்கப்பூர்

சிங்கப்பூர் இராமகிருஷ்ண மிஷனில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த, ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர், அன்னை சாரதா தேவி, சுவாமி விவேகானந்தர் ஆகியோரது நினைவுநாளில் சுவாமி ஹர்சானந்தி அவர்கள் கலந்துகொண்டு ஆன்மீக உரைகள் ஆற்றினார்.

## ஆர்ஜன்டீனா

ரஸ்யாவில் பிறந்த பத்திரிகையாளரும் நடிகையும் அரசியல்வாதியுமான மாதாஜி இந்திராதேவி சிறந்த யோகாசன ஆசிரியையாகத் திகழ்கிறார். தற்போது ஆர்ஜன்டீனாவில் வாழ்கிற இவரது யோகாசன வகுப்புகள் ரஷ்யா, சீனா உட்பட பல நாடுகளிலும் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## லண்டன்

டொக்டர் ஜே. சி. ஷர்மா என்பவரை நிர்வாகப் பணிப்பாளராகக் கொண்டு லண்டனில் இந்துக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக் கல்லூரியின் மூலம் இந்துமதம், கலை, கலாசாரம், கட்டிடக் கலை என்பன போதிக்கப்படவுள்ளன. காலக்கிரமத்தில் உலகின் பல பாகங்களிலும் இக் கல்லூரியின் கிளைகள் அமையும் என திரு. ஷர்மா அறிவித்தார்.

## நேபாளம்

உலக நாடுகளில் நேபாளம் மட்டுமே இந்து நாடாகும். இங்கு பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் என்பனவும் உள்ளன. ஆயினும் 93 சதவீதமானோர் இந்துக்கள்— ஏனையோர் முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும். இங்கு மதமாற்றம் செய்வதும், பசு கொல்லப்படுவதும் சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளன.

## குவைத்

ஈராக் குவைத்தை ஆக்கிரமிப்புச்செய்த வேளை விமானங்களில் வந்திறங்கிய ஏனைய வெளிநாட்டவர்களோடு பிரபல இந்திய சுவாமியான ஸ்ரீ சிவபாலயோகியும் குவைத்தில் வைத்து தடுத்து வைக்கப்பட்டார். 16 நாட்களின் பின்பே அவர் மீண்டும் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கதிர்காம பாதயாத்திரை



கருணைத் தெய்வம் கந்தனின் தலமான கதிர்காமம் பழம்பெருமையும் பக்திச் சிறப்பும் நிறைந்தது. கதிர்காமத்தில் அனைத்து மதத்தினரும் ஓரையருள் நிழலிலே ஒன்று கூடுகின்றனர். வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற பேதமின்றி பக்கள் கால்நடையாக நடந்து வந்து தமது பக்திப்பணியைத் தெரிவிக்கின்றனர். அத்தகையவொரு பாத யாத்திரைக் காட்சியை இங்கே காண்கின்றீர்கள்.


கதிர்காமம் தொடர்பான இலவச வெளியீடு ''பக்தி'' எனும் பெயரில் கதிர்காம அடியார்கள் தர்ம நிலையத்தினரால் வெளிவருகிறது. ஆர்வமுள்ளோர் பக்தி, 3/22, ஸ்ரீமான் தம்பையா முதலியார் சத்திரம், சாந்த அந்தோனியார் தெரு, கொச்சிக்கடை, கொழும்பு-13. எனும் விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

உலகம், உலகியல் தேவைகளில் தன்னிறைவு எய்தினாலும், ஆத்மீக சைதன்யத்தின் உட்செறிவு இல்லாவிட்டால், சமுதாயத்தின் நிலை நாய்க் கூட்டத்தினுள் வீசப்பட்ட மாமிசத்துண்டு போலாகிவிடும்.

பூமி முழுவதிலும் எவ்வளவோ குப்பை கூளங்கள் மண்டிக்கிடக்கின்றன. அவையெல்லாம் உன்னால் சுத்தஞ் செய்ய முடியுமா? இல்லை: ஆனால் பூமியின் ஒரு பகுதியாகிய உனது முற்றத்தை தினசரி கூட்டிச் சுத்தமாய் வைத்திருக்க முடியும். அதே போன்று உலகத்தவர்களுடைய மனதை உன்னால் சுத்திகரிக்க முடியாவிட்டாலும் உனது சொந்த மனதின் அழுக்காறுகளை நீக்கிச் சுத்தமாய் வைத்திருக்க முடியும்.

— ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா மஹராஜ்

# ஸ்ரீ தனஞ்செயனின் பரத விரிவுரை



ஜனவரி 27ம் திகதி, சென்னை கலாஞ்சலி நடனாலயாவைச் சேர்ந்த திரு. தனஞ்செயன், திருமதி சாந்தா தனஞ்செயன், செல்வன். சஞ்சித் தனஞ்செயன் ஆகியோரின் பரத விரிவுரை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. இவ் வைபவத்தின் போது அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் ஸ்ரீ தனஞ்செயனுக்கு மாலையிட்டு வாழ்த்துவதையும் ஸ்ரீ தனஞ்செயன், சஞ்சித் தனஞ்செயன் ஆகியோரின் பரத அபிநயங்களையும் இப் படங்களிற் காணலாம்.



# இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள விற்பனைக் கருமபீடம்

## விற்பனைக்குள்ள நூற்பட்டியலும், விலை விபரமும்

| | | |
|---|---|---|
| 1. | மூவர் தேவாரம் | 650.00 |
| 2. | இந்து கலைக்களஞ்சியம் | 250.00 |
| 3. | அமுதகலசம் | 250.00 |
| 4. | ESSENTIALS OF HINDUISM | 150.00 |
| 5. | இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோயில்கள் | 125.00 |
| 6. | அகில உலக இந்து மாநாட்டு மலர் | 125.00 |
| 7. | மட்டக்களப்பு மாவட்ட திருத்தலங்கள் | 25.00 |
| 8. | திருகோணமலை மாவட்ட திருத்தலங்கள் | 25.00 |
| 9. | BHAGAVAD GITA | 100.00 |
| 10. | முருகவேளின் பன்னிரு திருமுறைகள் | 100.00 |
| 11. | மதங்கசூளாமணி | 100.00 |
| 12. | STUDIES AND TRANSLATION | 100.00 |
| 13. | ஆரையம்பதி ஸ்ரீ பரமநயினார் சுவாமி | 50.00 |
| 14. | உடப்பு ஸ்ரீ அம்பாள் வரலாற்று நூல் | 20.00 |
| 15. | திருக்கதிர்காம பிள்ளைத்தமிழ் | 25.00 |
| 16. | மண்டூர் பிள்ளைத்தமிழ் | 25.00 |
| 17. | YOGASWAMY | 20.00 |
| 18. | SATGURU YOGASWAMY | 20.00 |
| 19. | பரமஹம்சர் கூறிய பக்திக்கதைகள் | 15.00 |
| 20. | ஔவையார் அறிவுச் செல்வங்கள் | 10.00 |
| 21. | இராமாயணக் குட்டிக்கதைகள் | 10.00 |
| 22. | ஆரையூர்க்கோவை | 20.00 |
| 23. | கோபுரம் | 07.00 |
| 24. | ஆலயமணி | 07.00 |
| 25. | பக்திப் பாடல்களின் ஒலிப்பதிவு நாடாக்கள் | 75.00 |

இந் நூல்களை திணைக்களக் கருமபீடத்தில் காரியாலய நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

குமரன் அச்சகம், 201, டாம் வீதி, கொழும்பு - 12.